இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 236 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 24 – செவ்வாய்க்கிழமை 07 ஏப்ரல் 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 236 : Thiruvalluvar Year - 2057 - Panguni 24 - Tuesday 07 April 2026 - Madurai 16 Pages ₹ 5.00

## இரட்டை என்ஜின் அரசு என்பது பொய் முழக்கம்! ஒன்றிய அரசிடம்

# மாநில உரிமைகளை - நலன்களை விட்டுக் கொடுப்பது தீமையே!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புப் பேட்டி!

**சென்னை, ஏப். 7 -**

**‘தி இந்து’ ஆங்கில நாளேட்டிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் “ஒன்றிய அரசிடம் மாநில உரிமைகளையும் நலன்களையும் விட்டுக் கொடுப்பது தீமையை விளைவிக்கும்” என்று கூறியுள்ளார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில், அதன் மூத்த இணையாசிரியர் பி.கோலப்பன் அவர்களுக்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் கூறியிருப்பதாவது :-**

“ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளைத் தாரை வார்ப்பது என்பது அடிமைத்தனத்திற்குச் சமமானது. மாநில உரிமைகளைக் காக்கின்ற போர்க்களமாகவே இந்தத் தேர்தலை நாங்கள் பார்க்கிறோம்.”

### மக்களின் தீர்ப்பு!

தமிழ்நாட்டு மக்கள் ஒரு தெளிவான முடிவை எடுக்கக் காத்திருக்கிறார்கள். ஒரு புறம், கடந்த காலங்களில் தமிழ்நாட்டின் நலன்களுக்கு எதிராகச் **செயல்பட்ட அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி**; மறுபுறம், மக்கள் நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் நமது **திராவிட மாடல் அரசு.** எங்களது சிறப்பான நிர்வாகத்தையும், தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய மக்கள் நலத் திட்டங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, மக்கள் தங்களது மகத்தான தீர்ப்பை தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவாக வழங்குவார்கள் என்பதில் எனக்கு எந்த ஐயமுமில்லை.

### இயக்கப்படும் பொம்மைகள் அல்ல!

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது சுயமரியாதை உள்ள இயக்கம். நாங்கள் ஒருபோதும் வேறொரு இடத்திலிருந்து இயக்கப்படும் **‘ரிமோட் கண்ட்ரோல்’** (Remotecontrol) கருவியாக மாறமாட்டோம். தமிழ்நாட்டின் தன்னாட்சியையும், உரிமையையும் எக்காலத்திலும் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

### அடிமைத்தனம் ஒருபோதும் தீர்வாகாது!

“மாநில உரிமைகளை ஒன்றிய அரசிடம் அடகு வைத்துவிட்டு, அவர்களோடு அனுசரித்துப் போவது என்பது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கே எதிரானது. அத்தகைய செயல் மாநிலத்திற்குப் பேரிழப்பையே ஏற்படுத்தும். ஒன்றிய அரசிடம் இணங்கிப்போனால் பா.ஜ.க. தமிழ்நாட்டிற்கு நன்மை செய்யும் என்று யாராவது நினைத்தால், அது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.



### எடப்பாடியின் ‘சரணாகதி’ அரசியல்!

உண்மையைச் சொல்லப்போனால், அத்தகைய சமரசங்கள் எந்த நன்மையையும் தராது; மாறாக, அது தமிழ்நாட்டிற்குப் பெரும் தீங்கையே விளைவிக்கும். சுருக்கமாகச் சொன்னால், **உரிமைகளை விட்டுக்கொடுத்து இணங்கிப்போவது என்பது அடிமைத்தனத்திற்குச் சமம்!”**

### கடந்த காலப் பாடம்

“ஒன்றிய பா.ஜ.க. அரசுடன் ஒத்துப் போவதாகக் கூறிக்கொண்ட எடப்பாடி பழனிசாமி தலைமையிலான முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாட்டிற்கு ஏதாவது உருப்படியான பலன்கள் கிடைத்தனவா? நிச்சயமாக இல்லை. அ.தி.மு.க.வின் அந்தச் ‘சரணாகதி அரசியல்’ தமிழகத்திற்கு எந்த நன்மையையும் பெற்றுத் தரவில்லை என்பது தான் வரலாறு.”

### புதிய கட்சிகளின் வருகையும் தி.மு.க.வின் வலிமையும்!

2019 மற்றும் 2024 மக்களவைத் தேர்தல்கள், 2021 சட்டமன்றத் தேர்தல் எனத் தொடர்ந்து நாம் பெற்று வரும் வெற்றிகள் குறித்துக் கேட்டபோது:

“நிச்சயமாக, கடந்த காலங்களில் நாம் ஈட்டிய அதே மகத்தான வெற்றியை இந்த முறையும் மீண்டும் நிலைநாட்டுவோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகு, நான் தலைமைப் பொறுப்பை ஏற்றது முதல் கழகம் தொடர் வெற்றிகளைக் குவித்து வருகிறது.

ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் புதிய அரசியல் கட்சிகள் தோன்றுவதும், மறைவதும் இயல்பான ஒன்றுதான். இதில் புதிதாகச் சொல்வதற்கு எதுவுமில்லை. **கடந்த 70 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் இதுபோன்ற எத்தனையோ மாற்றங்களையும், புதிய கட்சிகளின் வரவுகளையும் பார்த்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.** எதனையும் கண்டு நாங்கள் அஞ்சப்போவதுமில்லை, எங்களது இலக்கிலிருந்து பின்வாங்கப் போவதுமில்லை.”

### அனைவருக்குமான அரசு திராவிட மாடல் அரசு!

“கழகத்தின் திராவிட மாடல் அரசு என்பது ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கான அரசு அல்ல. அரசியல் பாகுபாடுகளைக் கடந்து, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்காகவும் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வரும் அரசு இது. தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் எங்களது ஏதாவதொரு திட்டத்தின் மூலம் நேரடியாகப் பயன் பெற்றுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் என்பது வெறும் அரசியல் கட்சி அல்ல; அது தமிழ்நாட்டு மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு மக்கள் இயக்கம்.”

### அ.தி.மு.க. - பா.ஜ.க கூட்டணியின் துரோகம்

“அதே நேரத்தில், அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் இணைந்து தமிழ்நாட்டின் நலன்களுக்கு எப்படியெல்லாம் துரோகம் இழைத்தன என்பதை மாநில மக்கள் நன்கு அறிவார்கள். வரலாறு காணாத கனமழையாலும், வெள்ளத்தாலும் மக்கள் தவித்தபோது, அவர்களுக்குத் தேவையான பேரிடர் நிவாரண நிதியை வழங்கவோ, போதிய உதவிகளைச் செய்யவோ ஒன்றிய பா.ஜ.க. அரசு முன்வரவில்லை என்பதை மக்கள் நேரில் கண்டார்கள். பா.ஜ.க.வுடன் கைகோர்த்ததன் மூலம், அ.தி.மு.க. தமிழ்நாட்டு மக்களை நட்டாற்றில் விட்டுவிட்டது. இதுதான் இன்றைய தேர்தல் களத்தின் நிதர்சனமான உண்மை.”

### மக்கள் மன்றத்தில் நீதி

“தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு எதிராகச் செயல்பட்ட அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஒருபுறம்; எங்களது அரசின் சீரிய நிர்வாகம் மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் மறுபுறம். இந்த இரண்டையும் மக்கள் தராசில் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்து, எங்களுக்குச் சாதகமான நீதியைத் தீர்ப்பாக வழங்கி வருகிறார்கள் இம்முறையும் வழங்குவார்கள்.”

### ஒன்றிய அரசுடன் சமரசமா? சித்தாந்த விளக்கம்!

மற்ற கட்சிகளை விட நீங்கள் ஏன் பா.ஜ.க.வை இவ்வளவு கடுமையாக விமர்சிக்கிறீர்கள் என்றும், அரசியலைத் தாண்டி மாநில நலன்களுக்காக பா.ஜ.க.வுடன் இணங்கிப் போயிருக்கலாமே என்றும் சிலர் எழுப்பும் கேள்விக்கு எனது பதில் இதுதான்:

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## தமிழ்நாட்டுக்குப் படையெடுத்துவரும்

# ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர்கள் என் கேள்விகளுக்கு பதில் அளிப்பார்களா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான கேள்வி!

**சென்னை, ஏப். 7 -**

**“தமிழ்நாட்டுக்கு படையெடுத்து வரும் ஒன்றிய அமைச்சர்களும் மற்றும் பா.ஜ.க. முதலமைச்சர்களும் என் கேள்விகளுக்கு பதில் அளிப்பார்களா” என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

அது வருமாறு :-

? தமிழ்நாட்டுக்கு வரும் ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர்களும் & பா.ஜ.க. முதலமைச்சர்களும் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா?

? தமிழ்மண்ணில் நின்று, “மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம்” என்று சொல்லி பரப்புரை செய்யத் தயாரா?

? நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டுக்குத் தருவது எவ்வளவு? பா.ஜ.க.வால் ஆளப்படும் செல்லக்குழந்தை மாநிலங்களுக்குத் தருவது எவ்வளவு? வெளிப்படையாக அறிவிக்கத் தயாரா?

? கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெறுவீர்களா அல்லது அடுத்த வாரமே நிறைவேற்றப் போகிறீர்களா?

? இவற்றுக்கெல்லாம், பழனிசாமி அவர்களால் தனது டெல்லி ஓனர்களிடம் பதில்பெற்றுத் தர முடியுமா?

? கண்ணியமற்ற அவதூறுகளை வாந்தி எடுப்பதை விடுத்து, மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளை எப்போதுதான் பேசுவீர்கள்?

? தமிழ்நாட்டைத் துண்டாட எத்தனை பேர் டெல்லியில் இருந்து படையெடுத்து வந்தாலும், தமிழ்நாடு தலைகுனியாது!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! #வெல்வோம்_ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.